**மஹியங்கனை பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹியங்கனை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹியங்கனை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவருத்தி உதவி செயற்றிட்டத்தில் இருந்து (LDSP) கிடைத்கப்பெற்ற நிர்மான உதவி ரூபா 60,189,965 நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | காணிகளின் உருத்தை சபைக்கு கையட்காமைனால் வேலைகளை மேட்கொள்ளாதிருந்த சந்தர்ப்பங்களின் போது LDSP உதவிப்பணம் பதிவேடுகள் மற்றும் வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆண்டில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவிகளின் மீதி, ரூபா 11,119,468 ஆக இருந்த போதிலும் அது ரூபா 11,232,742 ஆக ரூபா 113,274 ஆக அதிகரித்து நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் பரீட்சை மீதியில் வேறுபாடுகளை காண்பித்து தயாரிக்கப்பட்டிருந்த தொங்கல் கணக்கில் ரூபா 914,881 செலவு மீதி இனங்கண்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பரீட்சை மீதியில் உள்ள வேறுபாடுகளை இனங்காணும் வரை தற்காலிகமாக தொங்கல் கணக்கில் பதியப்பட்டுள்ளதுடன் வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து |

| | | | |
|---|---|---|---|
| | | | வைக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பத்திரிகை அறுவித்தல் பிரசுரிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 190,046 முற்கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் வருமானங்களை உழைப்பதற்காக பத்திரிகை அறுவித்தல் பிரசுரித்தல் காரணமாக அறிவித்தல் செலவினம் முற்கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்காண்டிற்கு உரிய செலவினங்களை இனங்கண்டு சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது நிதி நிலைமை கூற்றில் இனங்காணப்படாத முற்கொடுப்பனவுகள் ரூபா 71,539 காண்பிக்கப் பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,033,067 ஆக இருந்த போதிலும், அது ரூபா 4,932,547 ஆக ரூபா 2,899,480 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,033,321 ஆக இருந்த போதிலும், அது ரூபா 3,932,801 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | கிடைக்கும் என குரித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாமல் 15 வருடங்கள் அளவிலான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற பெறுவணவுகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் இன்றி கூட்டுமொத்தமாக ரூபா 120,185 நிலுவை ஏனைய வருமானமாக நிதிகூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை கடன் கொடுத்த மீதி நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் மற்றும் பேரேட்டின் பிரகாரம் ஆரம்ப மீதிகளுக்கிடையே ரூபா 31,907 வேறுபாடு மற்றும் இறுதி மீதிகளுக்கிடையே ரூபா 438,311 வேறுபாடும் காணப்பட்டது. | 2024 ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018, 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய, கல் உருளை, மற்றும் மோட்டார் கிரேடர் மற்றும் கலிபௌசர் சேவை வழங்கியதற்காக கிடைக்க வேண்டியதாக, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 522,475 மீதியை உறுதிப்படுத்துவதற்கு இயந்திர வாடகை பதிவேடு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்காமை காரணமாக திருப்திகரமாக பரிட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | நிலுவை வருமானத்தில் ரூபா 218,800 அறவிடபட்டுள்ளதுடன் ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் பதிவேடுகள் பேணிச்செல்லப்படும். | பதிவேடுகள் முறையாக பேணிச்சென்று வருமான வழிகளின் இருப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) மற்றும் 134(2) ஆம் பிரிவுகள் | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இணங்கண்டு அபிவிருத்தி மட்டத்தை கவனத்தில் கொண்டு வருடாந்த வருமானத்தின் அடிப்படையில் ஆதன வரி அறவிட வேண்டி இருந்த போதிலும் 2012 ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்துக்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கால ரீதியில் ஆதனங்களை மதிப்பீடு செய்து ஆதன வரி அறவிடப்படல் வேண்டும். |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104(4) | 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் 04 வாகனங்களுக்கு 08 சந்தரப்பங்களின் போது ஏற்பட்டிருந்த விபத்துகள் தொடர்பாக, நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,399,724 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,317,436 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சுபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2023 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 5,086,655 | 4,537,638 | 4,357,517 | 180,121 | 5,566,445 | 4,527,539 | 4,759,863 | |
| (ii) | வாடகை | 43,886,144 | 24,157,424 | 23,053,104 | 1,104,320 | 54,187,649 | 34,460,356 | 29,139,457 | 5,320,899 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,578,270 | 1,549,830 | 1,549,830 | 0 | 1,561,000 | 1,251,827 | 1,251,827 | 0 |
| (iv) | ஏனைய வருமானம் | 77,786,414 | 27,694,783 | 73,824,017 | 0 | 177,379,372 | 78,602,608 | 85,225,478 | 0 |
| | மொத்தம் | 128,337,483 | 57,939,675 | 102,784,468 | 1,284,441 | 238,694,466 | 118,842,330 | 120,376,625 | 5,320,899 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற 03 நிலுவை ஆதன வரி ரூபா 2,153,240 இனை அறவிடுவதற்கு நடவடிக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது ரூபா 66,700 தொகையை அறவிடுவதற்கு முடியுமாக இருந்தது. | நிலுவை பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 1,940,835 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தம்பான நீர் செயற்திட்டம் மூடப்பட்டுள்ளதுடன் தம்பராவ நீர் செயற்திட்டம் துண்டிக்கப்பட்டு, நீர்க் கணக்குகளில் ரூபா 12,822 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டிற்குரியதாக அறவிட வேண்டிய வருடாந்த மொத்த கேள்வி நிலுவை வாடகை வருமானம் ரூபா 18,776,518 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய அறவிடப்படாத கேள்வி நிலுவை வாடகை வருமானம் ரூபா 2,016,020 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,816,980 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,033,321 என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கு வில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் 933,607 கிடைக்கப் பெற்றுள்ளது. | நிலுவை முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | <u>நிலுவை கேள்வி வருமானம்</u><br>வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை அடுத்து வரும் 10 ஆந் திகதிக்கு முன்னர் அறவிட வேண்டியிருந்த போதிலும் மஹியங்கனை நகரத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு அருகில் பொது மலசலகூடத்தின் நிலுவை வாடகை (2022 ஆண்டு) இற்காக ரூபா 236,609 தொகையும், சனிக்கிழமை வாராந்த சந்தை வாடகை (2022 ஆண்டு) இற்காக ரூபா 4,479,950 தொகையும், மஹியங்கனை தனியார் பேருந்து நிலைய மலசலகூட வாடகைக்காக (2022 ஆண்டு) ரூபா 603,646 தொகையும் மற்றும் சனிக்கிழமை வாராந்த சந்தை வாடகைக்காக (2023 ஆண்டு) ரூபா 1,694,916 தொகையும் ஆக கூட்டுப்பெறுமதி ரூபா 7,015,121 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | 2021 ஆண்டின் போது மாகான சபை பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 3,559,082 செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கூட்டுப்பசளை தளம் உற்பத்தி செயற்பாடுகளுக்காக ஈடுப்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | கூட்டுப்பசளை செயற்பாடுகள் 2024 மே முதல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்று வதற்காக நடுவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | புதிய கூட்டுப்பசளை தளத்திற்கு அருகில் உக்குகின்ற மற்றும் உக்காத கழிவுகள் முறையற்ற வகையில் திறந்த நிலத்தில் போடப்பட்டு இருந்ததுடன் மழை நாட்களில் கழுவி செல்லப்பட்டு கழிவுப்பொருள் தளத்திற்கு அருகில் வழிந்தோடி மாஹாவலி ஆற்றில் சேரும் நிலைமை காணப்பட்டது. | கழிவுப் பொருட்களை தனித்தனியாக பெற்றுக் கொள்ளப்படும். | சுற்றாடல் பிரச்சினைகளை குறைக்கும் வகையில் கழிவுப் பொருட்களை முறையாக அகற்றுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 13,665,854 ஆன செலவில் 2013 ஆம் ஆண்டில் கழிவுப்பொருள் முதல் சுழட்சி மற்றும் கூட்டுப்பசளை உற்பத்திக்காக கட்டிடம் ஒன்று நிர்மாணித்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 18,846 செலவில் கிரயம் ஒன்றைச் செய்து மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த கட்டிடமும் மீளாய்வாண்டு வரையிலும் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | கட்டிடம் 2021 ஆண்டு முதல் கேள்வி மூலம் வழங்கப்பட்டுள்ளது. | வளங்களை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் தெல்தெனியாவில் 19 ஆவது பிரிவிற்கு நுழைக்கின்ற வீதி அபிவிருத்து செய்யும் வேலைக்காக மூலப்பொருட்கள் பெறக்கூடியதாக இருந்த அருகில் உள்ள இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாமையின் காரணமாக போக்குவரத்து செலவினம் ரூபா 25,778 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வேலைகளுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்டவைகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) முன்னைய ஆண்டில் தெல்தெனியாய பெட்டிக் கடை வீதி அபிவிருத்தி செய்வதற்காக, மூலப்பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக, மிகவும் நலனான வகையில் கிரயத்தை குறைக்கும் முறையில் நிர்மாண ஒப்பந்தத்தில் மதிப்பீடு தயாரிக்கப்படாமல் செலுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 47,517 மேலதிகமாக செல்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய டெக்டர் வண்டி பழுதுபார்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது மஹியங்கனை பிரதேசத்தில் தனியார் கராஜ்ஜிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இயந்திரப் பொறியியலாளர் ஆலோசனையினைப் பெற்று பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படுகின்றது. | வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சபைக்குரிய விடுமுறை விடுதிக் கட்டிடம் உடைந்த நிலைமையில் காணப்பட்டதன் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தது. கட்டிடத்தை பழுதுபார்த்து உரிய பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் பாதுகாப்பு சேவைக்காக இரண்டு ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு முதல் 2023 யூலை வரை மின்சாரம் மற்றும் நீர் பட்டியல்களுக்காக ரூபா 68,515 செலவிடப்பட்டிருந்தது. | பழுதுபார்த்து வருமானத்தை உழைப்பதற்கு ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | செலவினங்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் (LDSP) கடந்த ஆண்டின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 3,337,500 ஆன ஹலர் இயந்திரம், கூறுகளாக்கும் இயந்திரம் மற்றும் | கூட்டுப்பசளை செயற்பாடுகளுக்காக மின்சார இணைப்பு பெறப்பட்டுள்ளதுடன் மீண்டும் உற்பத்தி செயற்பாடுகள் மே 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

உடைந்த போத்தல்களை கூறுகளாக்கும் இயந்திரம் என்பன 2023 திசெம்பர் 31 வரையும் பயனற்றுக் காணப்பட்டது.

## 3.4 வருமானத்தை விஞ்சிய செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பத்தலயாய மற்றும் தம்பான நீர் செயற்திட்டங்களில் இருந்து 2023 ஆம் ஆண்டில் முதல் 06 மாத காலத்தில் சபைக்கு ரூபா 2,633,689 வருமானம் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் நீர் செயற்திட்டத்தைப் நடாத்திச் செல்வதற்காக மின்சாரம் மற்றும் சம்பளங்களை உள்ளடக்கிய செலவினமாக ரூபா 5,014,326 செலவிடப்பட்டிருந்தது. | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது மக்களின் நலன் நடவடிக்கை களுக்காக பேணிச் செல்லப்படுகின்ற செலவினங்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |